IITA

# அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
# International Institute of Tamil Arts

## தமிழ்க்கலைத் தேர்வு – 2022

பாடம்: நடனம் (பரதம்)　　　　தரம்: நான்கு

**நேரம்: மூன்று மணித்தியாலங்கள் (இரு பகுதிகளுக்கும்)**

## பகுதி ஒன்று

சுட்டெண்:......................

**பகுதி I இல் தரப்பட்டுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.**

**பகுதி II இல் முதலாவது வினாவிற்கும், ஏனையவற்றுள் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.**

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. நீர் கற்ற உருப்படிகளில் நிருத்தவகையைச் சேர்ந்தது
   - அ. கீர்த்தனை　　ஆ. தில்லானா
   - இ. பதம்　　ஈ. வர்ணம்

2. நாயகன், நாயகி பாவத்தினை பிரதானமாகக் கொண்ட உருப்படி
   - அ. பதம்　　ஆ. கீர்த்தனம்
   - இ. தில்லானா　　ஈ. அலாரிப்பு

3. அபிநயதர்ப்பணம் எனும் நூலை எழுதியவர்
   - அ. நாரதர்　　ஆ. பரதமுனிவர்
   - இ. நந்திகேஸ்வரர்　　ஈ. ஆதிவாயிலார்

4. லலிதமாகவும், நளினமாகவும் பெண்களால் ஆடப்படும் நடனம்
   - அ. தாண்டவம்　　ஆ. ஜதி
   - இ. நாட்டியம்　　ஈ. லாஸ்யம்

5. முடிவடைவு எனப்படுவது
   - அ. கிடதககதரிகிடதொம்　　ஆ. தத்தெய்தாஹா
   - இ. தட்டடவு　　ஈ. தெய்ஹத்தெய்ஹி

6. நீர் கற்ற சப்தம் அமைந்த தாளம்
   - அ. மிஸ்ரசாபு　　ஆ. திஸ்ரஏகம்
   - இ. ஆதி　　ஈ. ரூபகம்

7. கிண்கிணியின் ஆதி தெய்வம்

அ. சிவன் ஆ. சரஸ்வதி

இ. விநாயகர் ஈ. தாராகணம்

8. பஞ்சபாணத்தினைக் கொண்ட தேவஹஸ்தம்

அ. சிவன் ஆ. மன்மதன்

இ. இந்திரன் ஈ. பிரம்மா

9. பஞ்ச நடைகளில் நான்கு எண்ணிக்கையைக் கொண்டது

அ. திஸ்ரநடை ஆ. சதுஸ்ரநடை

இ. கண்டநடை ஈ. மிஸ்ரநடை

10. ஆடை, ஆபரணங்களால் வெளிப்படுத்தப்படும் அபிநயம்

அ. ஆங்கிக அபிநயம் ஆ. வாசிக அபிநயம்

இ. ஆகார்ய அபிநயம் ஈ. சாத்விக அபிநயம்

11. இரண்டு தட்டுகளிற்கு இடையே உள்ள இடைவெளி

அ. கதி ஆ. ஜதி

இ. ஜாதி ஈ. அட்சரம்

12. உபாங்கத்தில் அடங்கும் உறுப்பு

அ. தலை ஆ. கைகள்

இ. மார்பு ஈ. கண்கள்

13. இவற்றில் பகிர்ப் பிராணன் எனப்படுவது

அ. வீணை ஆ. விரைவு

இ. உறுதி ஈ. களைப்பின்மை

14. 1வது மண்டியடவு ஆடும்போது வரும் பாதபேதம்

அ. கர்த்தரி ஆ. குஞ்சித பிரமரி

இ. மோடிதம் ஈ. சலனம்

15. அரசரைக் குறிக்க பயன்படும் ஜாதி ஹஸ்தம்

அ. பிராமணர் ஆ. சத்திரியர்

இ. வைசிகர் ஈ. சூத்திரர்

16. நாட்டிய கச்சேரியின் ஆரம்பத்தில் ஆடப்படுவது

அ. அலாரிப்பு ஆ. ஜதீஸ்வரம்

இ. சப்தம் ஈ. கௌத்துவம்

17. இறைவனின் புகழ், கீர்த்தி என்பவற்றை விளக்கி ஆடப்படும் உருப்படி

அ. அலாரிப்பு ஆ. ஜதீஸ்வரம்

இ. பதம் ஈ. கீர்த்தனம்

18. கற்பகவிருட்சத்திற்கு இணையாகக் கொள்ளப்படுவது

அ. சபை ஆ. சபாநாயகர்

இ. குரு ஈ. நாட்டியப்பெண்

19. விநாயகரின் ஹஸ்தத்தை எடுத்துக் கொள்ளும் தேவஹஸ்தம்

அ. சரஸ்வதி ஆ. சிவன்

இ. விஷ்ணு ஈ. லஷ்மி

20. கோயிற் கிரியைகளிற்காக சம்ரதாயபூர்வமாக உருவாக்கப்பட்ட உருப்படி

அ. அலாரிப்பு ஆ. ஜதீஸ்வரம்

இ. கௌத்துவம் ஈ. தில்லானா

21. ஒன்பது கோள்களை குறிக்க பயன்படும் ஹஸ்தம்

அ. தேவஹஸ்தம் ஆ. நவக்கிரகஹஸ்தம்

இ. பாந்தவ்யஹஸ்தம் ஈ. தசாவதாரஹஸ்தம்

22. பரத நாட்டிய கச்சேரி முறையை ஒழுங்கமைத்தவர்

அ. பொன்னையா ஆ. சின்னையா

இ. வடிவேலு ஈ. சிவானந்தம்

23. “ப்ரத சூடாமணி” என்ற நாட்டியப் பள்ளியை உருவாக்கியவர்

அ. வீரமணிஐயா ஆ. ருக்மணிதேவி

இ. தஞ்சை பொன்னையா ஈ. அடையார் கே. லக்ஷ்மணன்

24. இருகைகளிலும் மயூர முத்திரையை எடுத்துக்கொள்ளும் உறவுமுறை (பாந்தவ்யஹஸ்தம்)

அ. தாய், மகள் ஆ. அண்ணன், தம்பி

இ. தந்தை, மாப்பிள்ளை ஈ. மாமன், மாமி

25. நரசிம்மரின் முத்திரைகளை எடுத்துக்கொள்ளும் தேவஹஸ்தம்

அ. சிவன் ஆ. விநாயகர்

இ. சண்முகன் ஈ. பார்வதி

26. லயமின்மை, பாடும் திறமின்மை இவை நாட்டியத்தின்

அ. பாத்திரலக்ஷணம் ஆ. அபாத்ரலக்ஷணம்

இ. சபை லக்ஷணம் ஈ. சபாநாயகன் லக்ஷணம்

27. தாளத்தினை ஒரே சீராகக் கொண்டு செல்வது

அ. லயம் ஆ. பாட்டு

இ. ஜாதி ஈ. வாத்த்தியம்

28. பல அடவுகளின் சேர்க்கை

அ. அடவு ஆ. நாட்டியம்

இ. நாடகம் ஈ. கோர்வை

29. அங்கம், உபாங்கம், பிரதியாங்கம் எனப்படுவது

அ. நிருத்தம் ஆ. நாட்டியக்கிரமம்

இ. திரியாங்கம் ஈ. பாத்திரப்பிராணன்

30. அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம் (IITA) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு

அ. 1998 ஆ. 1999

இ. 2000 ஈ. 2001

(30×1=30 புள்ளிகள்)

# அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
# International Institute of Tamil Arts

## தமிழ்க்கலைத் தேர்வு - 2022

பாடம்: பரதம் (நடனம்) | தரம்: நான்கு

### பகுதி இரண்டு

**நேரம்: மூன்று மணித்தியாலங்கள் (இரு பகுதிகளுக்கும்)**

**முதலாவது வினாவிற்கும் ஏனையவற்றுள் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.**

1. அ. பரதநாட்டிய சம்பிரதாய மார்க்க உருப்படிகளை வரிசைக்கிரமமாக எழுதுக.

   ஆ. நீர் பயின்ற கீர்த்தனத்தின் இராகம், தாளம், சாகித்திய கர்த்தா, நடன அமைப்பு என்பவற்றை எழுதுக.

   இ. கீர்த்தனம் அல்லது பதவர்ணத்தின் இலட்சணத்தை எழுதுக.

   ஈ. ஆதிதாளத்தில் நான்கு ஆவர்த்தனத்திற்கு குறையாமல் தாள, அங்க அடையாளங்களுடன் கோர்வை ஒன்றினை எழுதுக. (18 புள்ளிகள்)

2. அ. அபிநயம் என்றால் என்ன?

   ஆ. அவற்றின் நான்கு பிரிவுகளையும் எழுதி, சுருக்கமாக விளக்குக.

   (13 புள்ளிகள்)

3. அ. தசாவதார ஹஸ்தம் என்றால் என்ன?

   ஆ. அவற்றினை முத்திரை பிரயோகங்களுடன் விளக்குக. (13 புள்ளிகள்)

4. பின்வருவனவற்றின் லக்ஷணங்களைத் தருக.

   அ. சபை

   ஆ. கிங்கிணி

   இ. தில்லானா

   ஈ. பகிப்பிராணன்

   (13 புள்ளிகள்)

(ம.ப.பா)

5. அ. பாதபேதம் என்றால் என்ன?

ஆ. அவற்றின் பிரிவுகள், உட்பிரிவுகளின் பெயர்களை எழுதுக.

இ. இவற்றில் உத்பிளவன பேதத்தை விளக்கி எழுதுக. (13 புள்ளிகள்)

6. அ. தஞ்சை நால்வரின் பெயர்களைக் குறிப்பிடுக.

ஆ. இவர்களில் மோகினி ஆட்டம் உருவாகக் காரணமாக இருந்தவரின் வாழ்க்கை வரலாறு, தொண்டு என்பவற்றை விளக்குக. (13 புள்ளிகள்)

7. திரியாங்கத்தின் விளக்கத்தை விரிவாக எழுதுக. (13 புள்ளிகள்)